# Thiruvalluvar Educational Trust

Improving People's Education

(A non-profitable charity registered (no. 385/05) in Puducherry)
57, Bhavani nagar, Veerampattinam, Puducherry, India-605007.
Ph.: +91-413-2602110 Tele fax: +91-413-2600698
Email: valluvartrust@gmail.com - Web: www.valluvartrust.org


## NEWSPAPER REPORTS ON THE TRUST'S WORKS FOR THE YEAR 2006

## Second year presentation event in July 2006

**THE NEW INDIAN EXPRESS**
Dated: 25.07.2006

### Students given assistance

EXPRESS NEWS SERVICE

**Pondicherry, July 24:** As many as 834 students belonging to Government schools at Veerapatinam received educational assistance.

Ariyankuppam MLA, R Anantharaman, gave away gifts worth Rs 500 to the students. Nearly 2,520 students received stationery material, textbooks and notebooks.

The Thiruvalluvar Educational Trust organised the programme.

**DINAMALAR**
Dated: 26.07.2006

### கல்வி, நல உதவி வழங்கும் விழா

புதுச்சேரி, ஜூலை 26-

திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை சார்பாக மாணவர்களுக்கு கல்வி நல உதவி வழங்கும் விழா நடந்தது.

வீராம்பட்டினத்தில் உள்ள திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை சார்பாக மாணவ, மாணவிகளுக்கு கல்வி நல உதவி வழங்கும் விழா அம்மன் கோயில் எதிரில் உள்ள இரவு விடுதியில் நடந்தது. விழாவில் மன்ற கவுரவத் தலைவர் பெரியாண்டி வரவேற்றார். ஆலோசகர் சுயசாரதா சரவணன் நோக்க உரை ஆற்றினார். அனந்தராமன் எம்.எல்.ஏ., ஊக்கத் தொகை மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கினார். கவுன்சிலர் சக்திவேல், சிங்காரவேலர் சமூக சேவை இயக்க பொதுச் செயலாளர் குமரன் வாழ்த்துரை வழங்கினார்.

விழாவில் 15 கடற்கரையோர கிராமங்களில் இருந்து எஸ்.எஸ்.எல்.சி., மற்றும் பிளஸ் 2 வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.500 மற்றும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

மேலும், வீராம்பட்டினத்தில் உள்ள நான்கு அரசுப் பள்ளி, சோலை நகர் அரசு ஆரம்பப் பள்ளி, அரியாங்குப்பம் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, அபிஷேகப்பாக்கம் அரசு ஆரம்பப் பள்ளி, பனித்திட்டு அரசு நடுநிலைப் பள்ளி, நரம்பை அரசு ஆரம்பப் பள்ளி ஆகிய பள்ளிகளில் படிக்கும் 2 ஆயிரத்து 520 மாணவர்களுக்கு திருக்குறள், ஆங்கில இலக்கணம், ஆங்கில அகராதி, வரைபடம் உள்ளிட்டவை வழங்கப்பட்டது.

அறக்கட்டளை மேலாளர் சேதுபதி நன்றி கூறினார்.

**DINATHANDHI**

Dated: 25.07.2006



வீராம்பட்டினத்தில்

## மாணவ-மாணவிகளுக்கு கல்வி நல உதவி

### அனந்தராமன் எம்.எல்.ஏ. வழங்கினார்

புதுச்சேரி, ஜூலை. 25-

புதுவை அரியாங்குப்பம் திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை சார்பில் மாணவ-மாணவிகளுக்கு கல்வி நல உதவி வழங்கும் விழா வீராம்பட்டினத்தில் நடந்தது. விழாவில் அறக்கட்டளை கவுரவத்தலைவர் பெரியாண்டி வரவேற்றார். ஆலோசகர் சுபசாரதா சரவணன் நோக்க உரையாற்றினார். மாணவ-மாணவிகளுக்கு கல்வி நலத்திட்ட உதவிகளை அனந்தராமன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

விழாவில் வீராம்பட்டினம் கவுன்சிலர் சக்திவேல், பஞ்சாயத்து தலைவர் காங்கேயன், நெதலைச்சிறுபி சிங்காரவேலர் சமூக சேவை இயக்க பொதுச்செயலாளர் குமரன் மற்றும் தந்தா ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். முடிவில் அறக்கட்டளைச் செயலாளர் சேதுபதி நன்றி கூறினார்.

**DINAKARAN**

Dated: 24.07.2006

2 ** தினகரன் புது

பாண்டிச்சேரி 24 ஜூலை 2006



வீராம்பட்டினம் திருவள்ளுவர் கல்வி அறக்கட்டளை சார்பில் 10ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவி சித்துபிரியாவுக்கு அனந்தராமன் எம்.எல்.ஏ. கல்வி உதவி வழங்கினார். படம்: முருகவேல்